# 1

# இயேசு, தெய்வீகம் மற்றும் மனிதத்துவம்

## (1; 2; 4:14-16)

புதிய ஏற்பாட்டின் ஒவ்வொரு புத்தகத்தைப் போலவே, எபிரெயருக்கு எழுதிய நிருபமும், இயேசுவைப் பற்றியதாக உள்ளது. அவர், "நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசு" (3:1), "விசுவாசத்தைக் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசு" (12:2), "ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான இயேசு" மற்றும் "நம்முடைய கர்த்தராகிய இயேசு" (13:20) என்று அயைாளப்படுத்தப்பட்டுள்ளார். அவரே மனிதகுலத்தின் பாவங்களை நீக்கச் செலுத்தப்பட்ட பலியாக இருக்கிறார் (9:26), மற்றும் அவர் "நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" (13:8).

இருப்பினும், எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் முதல் இரண்டு அதிகாரங்களில் உள்ள வலியுறுத்தங்களே - அவர் தெய்வீகத்துவமானவராகவும் மனிதராகவும் இருந்தார்[1] என்பவைகளே - இயேசுவைப் பற்றிய முக்கியமான இரண்டு உண்மைகளாக உள்ளன. கிறிஸ்துவின் தெய்வீகத்துவம் மற்றும் மனிதத்துவம் ஆகியவற்றைப் பற்றி இந்த அதிகாரங்கள் நமக்குக் கூறுவது என்ன என்பதைப் பற்றியும் எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில் விவரிக்கப் பட்டுள்ளபடி, அவரது தெய்வீகத்துவம்/மனிதத்துவம் ஆகியவற்றின் விளைவுகளைப் பற்றியும் நாம் ஆழ்ந்து சிந்திப்போமாக.

## இயேசு தெய்வீகமானவராக இருக்கிறார்

கிறிஸ்துவின் தெய்வீகத்துவம் பற்றிய உண்மையை 1ம் அதிகாரத்தில் கவனியுங்கள். இயேசு கிறிஸ்துவைப் பற்றி இந்த அதிகாரம் நமக்குப் போதிப்பது என்ன?

*இயேசு, தேவனுடைய குமாரனாகவும் பேச்சாளராகவும் இருக்கிறார்* (1:1, 2அ). இப்படிப் பார்த்தால் அவர் ஒரு உன்னதமான பேச்சாளராக இருக்கிறார். "தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன்," "இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்." தேவனுடைய குமாரனிடத்தில் இருந்தே தேவனுடைய வசனத்தைப் பெறுதல் என்பது, அதை ஒரு தீர்க்கதரிசியிடத்தில் இருந்து பெறுதலைக் காட்டிலும் அளவற்ற வகையில் மேன்மையானதாக உள்ளது.

இயேசுவின் மூலமாக, தேவன் உலகத்தை உண்டாக்கி அதைத் தாங்குகிறார் (1:2ஆ, 3ஆ). சிருஷ்டித்தல் என்ற தேவனுடைய வேலை, அவரது குமாரனாகிய இயேசு கிறிஸ்து மூலமாக நிறைவேற்றப்பட்டது (மேலும் காண்க யோவான் 1:1-14). இருப்பினும் சகலத்தையும் சிருஷ்டித்தல் என்பது, உலகத்தின் மீதான

தேவனுடைய ஈடுபாட்டை முடித்து வைக்கவில்லை. தேவன் தமது குமாரன் மூலமாக உலகத்தை "தாங்குகின்றார்" என்ற காரணத்தினால்தான் உலகம் ஒன்றாகப் பற்றி நிற்கிறது.

*மொத்தத்தில் இயேசு தேவனைப் போன்றவராக இருக்கிறார்*; அவர் தெய்வீகத்துவப் பண்புகளைக் கொண்டிருக்கிறார்; இவர் "அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமா"யிருக்கிறார் (1:3அ). இயேசு, தேவனுடைய அதே இயல்பைக் கொண்டிருக்கிறார் (மேலும் காண்க பிலிப்பியர் 2:5-9).

*இயேசு, "பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி" தேவனுடைய "வலதுபாரிசத்திலே" உட்கார்ந்தார்* (1:3இ). முற்றிலும் தெய்வீகத்துவமான ஒருவர் தாம் பாவங்களைச் சுத்திகரிக்க முடியும்; தேவனாக இருக்கிற ஒருவர் தாம் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார முடியும். இயேசு தெய்வீகத்துவமானவராக இருக்கிறார்.

*இயேசு, தெய்வீகத்துவமானவராக இருப்பதால், அவர் தூதர்களைக் காட்டிலும் மேலானவராக இருக்கிறார்* (1:4-14). 1ம் அதிகாரத்தின் எஞ்சிய பகுதி, இயேசு தூதர்களைக் காட்டிலும் மேலானவராக இருக்கிறார் என்ற உண்மையைப் பற்றியதாக உள்ளது. அவர் ஏன் மேலானவராக இருக்கிறார்? அவர் தேவனுடைய குமாரனாக இருக்கிறார், அவர்கள் அவ்வாறு இருப்பதில்லை என்பதே முதன்மையான காரணமாக உள்ளது. இயேசுவைத் தேவன் தமது குமாரன் என்று அழைத்தார், ஆனால் தூதர்களை அவர் அவ்வாறு ஒருக்காலும் கூறியதில்லை (1:5, 6). அடுத்ததாக எழுத்தாளர், குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைத் தூதர்களோடு நேர்மாறாக ஒப்பிட்டார் (அ) அவர் தொழுதுகொள்ளப்படுகிறார்; இதற்கு நேர்மாறாக தூதர்கள் அவரைத் தொழுதுகொள்கின்றனர் (1:6). (ஆ) தூதர்கள் பணிவிடை ஆவிகளாக இருக்கின்றனர், ஆனால் இயேசு ஒரு இராஜ்யத்தின் மீது ஆளுகை செய்கிறார் (1:7-9). (இ) இயேசு, ஒரு நாளிலே அழியவிருக்கும் பூமியனைத்தையும் உண்டாக்கினவராக இருக்கிறார், மற்றும் அவர் தேவனுடைய வலதுபாரிசத்தில் இருந்து ஆட்சி செய்கிறார் (1:10-13); தூதர்கள், "இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்கள்" (கிறிஸ்தவர்கள்) நிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு "பணிவிடை ஆவிகளாக" இருக்கின்றனர் (1:14).

இந்த உண்மைகள் நமக்கு அர்த்தப்படுத்துவது என்ன? ஒருவர், கிறிஸ்துவினால் தாம் இரட்சிக்கப்பட வேண்டும் என்று விரும்பினால், இயேசு தேவனுடைய குமாரனாகவும் தெய்வீகத்துவமானவராகவும் இருக்கிறார் என்ற சத்தியம் அவரால் விசுவாசிக்கப்பட வேண்டும் (காண்க யோவான் 8:24)! எபிரெயர் 2:1-4ல் எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் இயேசுவின் குமாரத்துவம், அவரது தெய்வீகத்துவம் ஆகியவற்றின் விளைவுகளைப் பற்றியும், இன்றைய நாட்களில் அவர் தேவனுடைய பேச்சாளராக இருக்கிறார் என்ற உண்மையைப் பற்றியும் எடுத்துரைக்கிறார்.

## இயேசுவின் தெய்வீகத்துவம் முக்கியமானதாக இருப்பது ஏன்?

இயேசுவின் அடையாளத்தினுடைய மாபெரும் முக்கியத்துவம் பின்வரும் வசனங்களில் விளக்கப்பட்டுள்ளது: ஆகையால், நாம் கேட்டவைகளை

*“விட்டுவிலகாதபடிக்கு,” அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டும் (2:1). இந்தக் கருத்தை எழுத்தாளர், பழைய ஏற்பாட்டுப் பிரமாணம் மற்றும் அதைக் கடைப்பிடிப்பவர்களை பற்றிக் குறிப்பிடுதல் மூலம் விவரித்தார். அவர், “ஏனெனில், தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு (மோசேயின் நியாயப்பிரமாணமே அந்த வசனமாக இருந்தது) விரோதமான எந்தச் செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக (அவரது வாசகர்கள் தாங்கள் அதைச் செய்ததாக ஒப்புக்கொள்வார்கள்) அவர்களுடைய வசனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க, (அவரது வாசகர்கள் அது அவ்வாறே செய்தது என்று ஒப்புக்கொள்வார்கள்) ... இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம்” என்று கூறினார் (2:2, 4). இந்த நிருபத்தை முதன் முதலாக வாசித்தவர்கள், இந்த விவாதம் மறுக்க இயலாதது என்று கண்டிருப்பார்கள் - இப்படிப்பட்ட விஷயத்தில் தப்பித்துக் கொள்ளுதல் எதுவும் இராது!*

*தேவன் தமது குமாரன் மூலமாகப் பேசினார் என்பதே இவ்வசனப் பகுதியின் வலியுறுத்தமாக உள்ளது; ஆகையால், நாம் அவருக்குச் செவிகொடுக்க வேண்டும் அல்லது நித்திய விளைவுகளை எதிர்கொண்டாக வேண்டும்!*

*நாம் செய்ய வேண்டியது என்ன என்று குறிப்பிட்ட சில மக்கள் கூறும்போது, நாம் அதைக் கவனிக்க வேண்டும். பிள்ளைகள் தங்கள் பெற்றோர் கூறுவதைக் கவனிக்க வேண்டும், மற்றும் மாணவர்கள் தங்கள் ஆசிரியர்கள் கூறுவதைக் கவனிக்க வேண்டும், மற்றும் குடிமக்கள் காவலர்கள் கூறுவதைக் கவனிக்க வேண்டும். அதிகாரத்தில் உள்ளவர்கள் கூறுவதைக் கவனிக்க நாம் தவறினால், நாம் இடர்ப்பாட்டில் இருப்போம்! தெய்வீகத்துவமானவரும் தேவனிடத்தில் இருந்தே பேசுகிறவருமான இயேசு கிறிஸ்து கூறுவதைக் கவனிக்க நாம் மறுத்தால், நாம் எவ்வளவு அதிகமான இடர்ப்பாட்டில் இருப்போம்!*

## இயேசு மனிதராக இருந்தார்

*எழுத்தாளர், கிறிஸ்துவின் தெய்வீகத்துவத்தைப் பற்றிப் பேசிய பின்பு, அவரது மனிதத்துவம் பற்றி விவரித்தார். எபிரெயர் 2:5-18ல் விளக்கப் பட்டுள்ளபடி, கிறிஸ்துவின் மனிதத்துவம் பற்றிய மாபெரும் சத்தியத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள். இவ்வசனப் பகுதியானது, இயேசுவுக்கும் தூதர்களுக்கும் இடையிலான நேரெதிர்த் தன்மையை ஒப்பிடுதலைத் தொடருதலுடன் தொடங்குகிறது. 1ம் அதிகாரத்தில், இயேசு தெய்வீகத்துவமானவராக இருப்பதால் அவர் தூதர்களைக் காட்டிலும் மேலானவர் என்பதில் வலியுறுத்தம் இருக்கையில், 2ம் அதிகாரத்தில். இயேசு மனிதரான காரணத்தால் அவர் தூதர்களைக் காட்டிலும் மேலானவராக இருக்கிறார் என்பதில் வலியுறுத்தம் இருக்கிறது. மேற்கோள் காண்பிக்கப்பட்ட வசனப்பகுதியில் (சங்கீதம் 8:4-6ல் இருந்து), தேவன் தூதர்களுக்கு இந்த உலகத்தைக் கீழ்ப்படுத்துவதாக வாக்குறுதி அளிக்கவில்லை என்பதை எழுத்தாளர் சுட்டிக்காண்பித்தார். மாறாக அவர் அந்த வாக்குறுதியை மனிதகுலத்திற்கு ஏற்படுத்தினார். கீழ்ப்படுத்துதல் பற்றிய வாக்குறுதி இந்த பூமியின்மீது நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை (2:8ஆ); ஆனால் அது, “தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு” (2:9) மூலமாக நிறைவேற்றப் பட்டுள்ளது. அவர் “மகிமையினாலும் கனத்தினாலும்*

முடிசூட்டப்"பட்டுள்ளார், எனவே சங்கீதத்தின் முன்னுரைத்தல் அவருக்குள் நிறைவேற்றத்தைக் காணுகிறோம்.

இவ்வாறு கனப்படுத்தப் படுவதற்கு இந்த இயேசு யாராக இருக்கிறார்? அவர் ஒரு மனிதராக வாழ்ந்தார்: (அ) அவர் மரணத்தை உத்தரித்தல் என்பதை அனுபவித்தார் (2:9, 14); உடல்ரீதியானவர்கள் மாத்திரமே மரணம் அடைய முடியும். (ஆ) அவரும் அவர் மீட்கிற மனிதர்களும் ஒரே ஆதாரமூலத்தில் இருந்து வருகின்றனர் (2:10, 11). (இ) அவர் மனிதர்களைத் தமது சகோதரர்கள் என்று அழைத்துள்ளார் (2:11ஆ -13). (ஈ) அவர் மனிதத்துவத்துடன் "மாம்சத்தையும் இரத்தத்தையும்" பகிர்ந்துகொண்டார் (2:14). (உ) அவர், தூதர்களுக்கு உதவுவதற்கு மாறாக, தமது மாம்சமும் இரத்தமுமான சகோதரர்களுக்கு உதவுகிறார் (2:16). (ஊ) அவர் "எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது" (2:17). ஆகையால், இயேசு தெய்வீகத்துவமானவராக இருந்தபோதிலும், அவர் எல்லா வகையிலும் முழுமையான மனிதராகவும் இருந்தார்![2] இயேசுவைப் பற்றிய - அவரது தெய்வீகத்துவம் மற்றும் அவரது மனிதத்துவம் என்ற - இந்த மாபெரும் சத்தியங்கள் இரண்டும், உண்மையான கிறிஸ்தவராக இருக்கும் எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

இயேசு முற்றிலும் மனிதராக இருந்தார் என்ற உண்மையின் நடைமுறைத் தனிச்சிறப்பு என்ன? அந்தக் கேள்விக்கு எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் நமக்குப் பதில் அளித்தார். எபிரெயர் 2:17, 18ஐ மறுபடியும் வாசியுங்கள். அவர் மனிதத்துவத்தை அனுபவித்ததன் மூலமாக, அவர் நமக்குக் குற்றமில்லாத பிரதான ஆசாரியராக இருக்க முடிந்தது என்பதே இயேசு மனிதராக இருந்ததின் விளைவாக உள்ளது: "அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்" (2:18). இந்த நிருபத்தில் பிற்பாடு இதன் எழுத்தாளர் பின்வருமாறு கூறினார்:

> நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதானஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம் (4:15, 16).

## இயேசுவின் மனிதத்துவம் முக்கியமானதாக இருப்பது ஏன்?

இயேசு, முற்றிலும் மனிதராக இருந்த காரணத்தினால், நாம் அனுபவிக்கும் பிரச்சனைகள் மற்றும் சோதனைகளின் எல்லா வகைகளையும் அவர் அனுபவித்தார்; அதனால் அவர் நமது பலவீனங்களில் நமக்காகப் பரிதபிக்க முடியும். மற்றும் அது, நமக்காகப் பரிந்துபேசும் பரிவிரக்கம் உள்ள பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறார் என்று அறிந்த நிலையில் நாம் "கிருபாசனத்தை" தைரியமாய் அணுக முடியும் மற்றும் அணுக வேண்டும் என்றும் அர்த்தப்படுகிறது.

இயேசு தெய்வீகத்துவமானவராக, தேவனுடைய குமாரனாக இருக்கும் காரணத்தால், அவர் தமது வசனத்தில் என்ன கூறுகிறார் என்பதற்கு நாம்

கவனம் செலுத்த வேண்டும். நாம் அவ்வாறு செய்யவில்லை என்றால், நாம் தண்டிக்கப்படுவோம். அவர் மனிதராக இருப்பதால், எல்லா வகையிலும் நம்மைப்போலானதால், நமது மனிதத்துவத்தை அனுபவித்துள்ள அவர் நமது பலவீனங்கள் குறித்துப் பரிதபிக்கிறார் மற்றும் நமக்காகத் தேவனிடத்தில் செயல் விளைவுடன் பரிந்து பேசுகிறார் என்று அறிந்த நிலையில், நாம் தேவனிடத்திற்கு தைரியமாக அணுக முடியும்.

ஜாக்கிரதையும் தைரியமும்: இந்தப் பண்புகள் நமது வாழ்வில் கிறிஸ்துவின் தெய்வீகத்துவத்தையும் மனிதத்துவத்தையும் பிரதிபலிக்க வேண்டும். தெய்வீகக் கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேள்விப்பட்டு கீழ்ப்படிய நாம் எப்போதும் ஜாக்கிரதை நிறைந்தவர்களாக இருக்க வேண்டும், ஆனால் நாம், நமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டுள்ள பரிதபிக்கும் பிரதான ஆசாரியர் ஒருவரைக் கொண்டுள்ள காரணத்தினால், நாம் தேவனிடத்திற்குத் தைரியமாக அணுக முடியும்.

## முடிவுரை

எபிரெயர் 2ம் அதிகாரம், ஒருவேளை, வேதாகமத்தின் மிகப் பெரிய சத்தியத்தைப் போதிக்கிறது: நம் ஒவ்வொருவருக்காகவும் கிறிஸ்து மரித்தார்! "தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு" (2:9). "மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும்," "ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற் குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கு" அவர் மரணமடைந்தார் (2:14, 15). அவர் ஒவ்வொருவருக்காகவும் மரித்தார்: அது, பாவத்தின் அடிமைத்தனத்தில் இருந்து நீங்கள் விடுவிக்கப் படுவதற்காக, அவர் உங்களுக்காகவும் மரித்தார் என்று அர்த்தப்படுகிறது!

இதைப் பற்றி நீங்கள் என்ன செய்வீர்கள்? "சகல அதிகாரமும்" தரப்பட்டுள்ள (மத்தேயு 28:18) ஒருவருக்கு நீங்கள் கீழ்ப்படிவீர்களா? நீங்கள் இயேசுவை விசுவாசித்து, அவர் கூறுவதைக் கவனித்து, உங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்பி, உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு மற்றும் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுதல் மூலம் அவரது வார்த்தைக்குக் கீழ்ப்படிவீர்களா? பரலோகத்தில் இருந்து பேசுகிற ஒருவர் கூறுவதைக் கவனிப்பதற்கு மறுக்கத் துணிவீர்களா? இப்படிப் பட்ட பெரிதான இரட்சிப்பைப் புறக்கணித்தால், நீங்கள் எப்படித் தப்பிப்பீர்கள்? நீங்கள் தப்பிக்க மாட்டீர்கள் என்பதே பதிலாக உள்ளது! நீங்கள் உங்கள் பாவங்களுக்காகத் தண்டிக்கப்படுவீர்கள்! அது உங்களுக்கு நடைபெற அனுமதிக்காதீர்கள். உங்களுக்காக மரித்தவரிடத்திற்கு வாருங்கள்.

---

குறிப்புகள்

[1]இந்தப் பிரசங்கம் - "தெய்வீகமான கிறிஸ்து" என்ற ஒரு பாடமும், "மனிதரான கிறிஸ்து" என்ற ஒருபாடமுமாக - இரண்டு பாடங்களாகப் பிரிக்கப்பட முடியும். ஒன்று ஞாயிற்றுக்கிழமை காலை வேளையிலும் மற்றொன்று ஞாயிற்றுக்கிழமை இரவு வேளையிலும் பிரசங்கிக்கப்பட முடியும். [2]கணக்கு ஒப்புவிக்க வேண்டிய மற்ற மனிதர் போலின்றி, இயேசு ஒருக்காலும் பாவம் செய்ததில்லை என்பது விதிவிலக்காக உள்ளது. காண்க எபிரெயர் 4:14-16.